

T. Vykundanathan/ICRC

"என் குழுவிலுள்ள ஏனைய காணாமல் போன கணவர்களின் மனைவியரிடம் பேசிய பின், எனக்கு எளிதாகவும், மகிழ்வாகவும் உள்ளது. என்னைப் போன்ற பெண்களுக்கு ஆலோசனை வழங்கும் நிலையில் என்னைக் காணக்கூடியதாகவுள்ளது. எங்கள் குழு ஒரு நெருக்கமான பிணைப்பை அமைத்துக் கொண்டுள்ளதுடன், வாராந்தம்ரவி ஒருவரோடு ஒருவர் தொலைபேசியில் பேசிக் கொள்வோம்."

- காணாமல் போனவரின் மனைவி

## செயல் நோக்கு

செஞ்சிலுவை சர்வதேசக் குழு (ஐசிஆர்சி), பக்கசார்பற்ற,நடுநிலையான, சுதந்திரமாக செயற்படும் ஒரு மனிதாபிமான அமைப்பாகும். ஆயுத மோதல்கள் மற்றும் ஏனைய வன்முறைச்

சூழ்நிலைகளின் போது பாதிக்கப்படுவோரின் வாழ்வையும் அவர்களின் கௌரவத்தையும் பாதுகாத்து அவர்களின் வாழ்க்கைக்கு உதவிகள் வழங்குவதையும் தனது பிரத்தியேக செயல் நோக்காகக் கொண்டுள்ளது. மனிதாபிமான சட்டங்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானக் கொள்கைகளை ஊக்கவிப்பதன் மூலமும் அவற்றை வலுப்படுத்துவதன் மூலமும் மனித அவலங்கள் ஏற்படுவதை தடுக்கும் முயற்சியிலும் ஐசிஆர்சி ஈடுபடுகிறது. 1863 இல் ஆரம்பிக்கப்பட்ட ஐசிஆர்சி, ஜெனீவா சமவாயங்களும், செஞ்சிலுவை, செம்பிறைகளின் சர்வதேச இயக்கமும் உருவாக வழியமைத்தது. இது ஆயுத மோதல்கள் மற்றும் ஏனைய வன்முறைச் சூழ்நிலைகளின் போதான இயக்கத்தின் சர்வதேச பணிகளை வழிப்படுத்தி அதனை ஒருங்கமைக்கின்றது.


செஞ்சிலுவை சர்வதேசக் குழு
29, லெயாட்ஸ் வீதி, கொழும்பு 05
இலங்கை.
தொலைபேசி: +94 (11) 250 33 46, தொ.ந: +94 (11) 250 33 48
மின்னஞ்சல்: colombo@icrc.org

ஙறறஙறற.ைஉசஉ.ழசப
70, வைரவர் கோவில் வீதி,
வைரவர் புளியங்குளம்,
வவுனியா,
இலங்கை
தொலைபேசி: +94 (0)24 222 28 55, தொ.ந: +94 (0)24 222 25 37

மட்டக்களப்பு அலுவலகம்
மன்ரீசா வீதி,
கொத்துக்குளம்,
பிள்ளையாரடி,
மட்டக்களப்பு,
இலங்கை
தொலைபேசி: +94(0)65 222 70 70


ICRC


2017.0201/250 11.2017 1500


Cover photo: Joanna Atkinson/ICRC



# காணாமல் போன குடும்பங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருத்தல்

ICRC





Pascal Jequier/ICRC

"என் மகன் 26 ஆண்டுகளாக காணாமல் போயுள்ளார். நாம் இந்தக் குழுவில் சேரும் வரை எங்கள் குடும்பத்திற்கு வெளியே எவருடனும் அதைப்பற்றிப் பேசவில்லை. முன்பு நாம் ஒரே கிராமத்தில் வசித்த போதும், அடிக்கடி ஒருவரையொருவர் சந்தித்தபோதும், வெறும் வரவேற்புடன் நிறுத்தி விடுவோமே தவிர, எங்கள் கவலையைப் பற்றிப் பேசுவதில்லை. இப்போது எமக்கு ஒருவரை ஒருவர் நன்றாகத் தெரியும். மற்றும் காணாமல்போன பிள்ளைகளைப் பற்றிப் பேசுவதனால், நீண்ட காலமாக எமக்குள் இருந்த சுமை இறக்கி வைக்கப்பட்டுள்ளது."

- காணாமல்போன மகனின் தாயார்













## உங்களில் ஒருவர் நிகழ்ச்சித் திட்டம்

ஐப்பசி 2014 மற்றும் கார்த்திகை 2015ற்கு இடையே, இலங்கையில் காணாமல் போனவர்களின் குடும்பங்களின் பன்முகத் தேவைகளைப் புரிந்துகொள்ள, நாடளாவிய ரீதியில் மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டது. தை 2016ல் அம் மதிப்பீட் கண்டுபிடிப்புக்களைப் பரிந்துரைகளோடு ஓர் அறிக்கை வடிவில் இலங்கை அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்தது. இது ஆடி 2016ல் பிரசுரிக்கப்பட்டது. இதன் மூலம் காணாமல் போனோர் குடும்பங்க வேலை செய்யும் பிற பங்குதாரர்களும் அக்குடும்பங்களுக்கு தங்கள சொந்தத் திட்டங்களோடு உதவி செயÊயக்கூடியதாக இருக்கின்றது.

இம்மதிப்பீட்டின் மூலம் கண்டறிந்தது என்னவெனில், காணாமல் போனவரின் குடும்பங்களது முக்கியமான தேவை தம் காணாமல் போன அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதும், அவர்கள் இல்லாமையினால் நிச்சயமற்ற நிலையை சமாளிக்க உணர்ச்சி பூர்வமான ஆதரவுமே ஆகும். இக்குடும்பத்தினருக்கு மேலும் தங்கள் வாழ்க்கையை நடத்திச் செல்ல வாழ்வாதார உதவியும், சட்ட மற்றும் நிர்வாக விடயங்களில் ஆதரவும் தேவைப்படுகின்றது.

இலங்கையில் காணாமல் போனோர் மற்றும் அவர் குடும்பத்தினருக்காகவும் அவர்களின் உணர்வு பூர்வமான மற்றும் சமூக ரீதியான பிரச்சினைகளைச் சமாளிக்க உதவும் முகமாகவும் மனிதாபிமான நடவடிக்கைகளுள் ஒரு பகுதியாக உங்களில் ஒருவர் நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடங்கியது.

உள்;ர் அமைப்புக்கள் மூலம் செயற்படுத்தப்படும் இந் நிகழ்ச்சித் திட்டமானது, ஒரு விரிவான ஆதரவுத் திட்டமாகும். காணாமல் போனோரின் நெருங்கிய குடும்ப உறுப்பினர் இத்திட்டத்தின் மூலம் :

காணாமல் போனோர் இல்லாமையினால் ஏற்பட்ட நிச்சயமற்ற நிலையைச் சமாளிக்க, உணர்வுபூர்வமான மற்றும் சமூக ரீதியான பிரச்சினைகளுக்கு ஆதரவு பெற்றுக்கொள்வர்.

சட்ட, நிர்வாக மற்றும் பொருளாதாரத் தேவைகளைத் தீர்க்கும் முகமாக அவர்களைக் குறித்த அர மற்றும் உள்;ர் வளங்களுக்கு வழிநடத்தப்படுவர்.

அரச மற்றும் உள்;ர் வளங்கள் இல்லாதவிடத்து, பொருளாதார ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்ட வாழ்வாதாரங்களை மீண்டும் ஆரம்பிக்க அல்லது விரிவாக்க ஆதரவைப் பெற்றுக்கொள்வர்.

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவினால் இத்திட்டம் கார்த்திகை 2015ல் அநுராதபுரத்திலும், மார்கழி 2015ல் மன்னாரிலும், பங்குனி 2016ல் திருகோணமலையிலும் ஆரம்பிக்கப்பட்டது. மேலும், இத்திட்டம் நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட வேறு மாவட்டங்களிலும் தொடரப்படவுள்ளது.

## துணை நிற்பவர்கள் உங்களி ஒருவர் நிகழ்ச்சித் திட்டம்

இதÊதிட்டமானது காணாமல் போனவர்களின் நெருங்கிய உறவினர்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. அவர்களை என்று குறிப்பிடலாம். அவர்கள் தங்கள் சொந்த சமூகங்களில் காணாமல் போன ஏனைய குடும்பங்களுடன் நேரடியாக ஈடுபடுவர். செஞ்சிலுவை சர்வதேசக் குழுவானது.சி.ஆர்.சி இத்துணை துணைளுக்கு காணாமல் போனோர் குடும்பங்களின் தேவைகளை மதிப்பிடவும், உணர்வு பூர்வமான ஆதரவை வீட்டுத்தரிசிப்புகள் மற்றும் சகபாடிக் குழு அமர்வுகள் மூலமும் வழங்கவும், சட்ட, நிர்வாக மற்றும் பொருளாதார ரீதியான பிரச்சினைகளைத் தீர்க்கவும், வழிகாட்டவும், பயிற்சி கின்றது. ஆகவே, துணை நிற்பவர்கள் ஓர் "உதவி கொடுக்கும் நண்பர்கள்" போலவே இக்குடும்பங்களுக்குதற்போதைய மற்றும் எதிர்கால வாழ்வில் கவனம் செலுத்தவும் அவர்களுக்குத் தேவையான விடைகளைப் பெறவும் உதவியாக இருக்கின்றனர்.

## நிகழ்ச்சித் திட்டம் செயற்படும் முறை

இத்திட்டத்தை மிகுந்த நிபுணத்துவத்துடன் செயற்படுத்துவதற்காக செஞ்சிலுவை சர்வதேசக் குழுவானது உள்;ர் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து கடமையாற்றுகின்றது. பங்குதாரராகக் கடமையாற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்படும் போது, அந்நிறுவனங்கள் இலங்கையின் யுத்த காலத்தின் போதும், பின்னரும் பாதிக்கப்பட்டோருக்கு உளவியல், சமூக ஆதரவு வழங்கிய அனுபவங்கள் அடிப்படையிலும், உறுதியான தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் குடும்பங்களின் நிலைமைகள் பற்றிய புரிந்துணர்வின் அடிப்படையிலுமே தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இவ்வகைப் பங்குடைமையானது இத்திட்டத்தின் தொடர்ந்து செல்லும் தன்மையை உறுதிப்படுத்துகின்றது.

துணை நிற்பவர்களுக்கு முதலில் எவ்வாறு உளவியல், சமூக உதவி வழங்குவது என்றும், எவ்வாறு தேவைகளை மதிப்பிடுவது என்றும், அத்தோடு, வளங்களை அடையாளம் காணவும் பயிற்சி அளிக்கப்படும். பின்னர் 5-6 வாரங்களுக்கு, உறவுகளை மேம்படுத்துவதிலும், தேவைகளை மதிப்பிடுவதிலும், அத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக உள்ரில் கிடைக்கும் வளங்கள் பற்றி விபரித்தல் போன்றவற்றில் ஈடுபடுவார்கள்.

அத்தோடு, அவர்கள் குடும்பத்தினரை உரிய வளங்களுக்கு வழிகாட்டி விடுவார்கள். உதாரணமாக, ஒரு நபருக்கு சட்ட அல்லது நிர்வாக நடைமுறை உதவி தேவை என்றால், துணைவர் சம்பந்தப்பட்ட உள்;ர் அர அல்லது அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றை அடையாளப்படுத்த வேண்டும், உரிய தகவல் வழங்க வேண்டும், அத்தோடு தேவையானால் அந்நபருடன் அலுவலகத்திற்குச் சென்று பிரச்சினையைத் தீர்க்க உதவலாம். மேலும், நிற்பவர்கள் குடும்பங்களின் உதவித் திட்டங்களுக்கு விண்ணப்பிக்கும் முறைகளிலும்ஆதரவளிப்பார்கள். (உதாரணமாக: சமூர்த்தி, வீடமைப்புக் கடன், நுண் கடன்கள்) மேலும் உள்ளூர் சேவைகளை அணுகுவதன் மூலம் தேவைப்பட்டால், தங்கள் நிர்வாக சிக்கல்களைத் தீர்க்கத் தேவையான ஆவணங்களைப் பெற முடியும். உதாரணமாக: நில உரிமை மாற்றம், காணாமல் போனோரின் சொத்துக்கள் அல்லது ஓய்வூதியம் மற்றும் காணாமல் போனோர் தொடர்பில் வரவின்மைக்கான சான்றித்களைப் பெறல்.

அடுத்த கட்டமாக, சகபாடி ஆதரவுக் குழுக்களை எப்படி நடத்துவது என்னும் பயிற்சி வழங்கப்படும். இதன் பின்னர், துணைபவர் 6-8 பேர் கொண்ட ஒரே பகுதியைச் சேர்ந்தவர்களைக் கொண்ட குழுக்களை அமைத்து 03 மாதங்களுக்குச் சந்திப்பார்கள். இவÊகளுக்கு தங்கள் வருத்தங்கள் மற்றும்ளான்தம் இடம்பெறும் வாழ்க்கைப் போராட்டங்கள் பற்றியும் பகிர்ந்து அவற்றை எவ்வாறு சமாளிக்கலாம் என்பதைப் பற்றிக் கலந்துரையாட ஒரு நல்ல வாய்ப்பைக் கொடுக்கின்றது. காணாமல் போனோர்களின் உறவினர்கள் அவர்களின் வீடுகளில் தங்கள் கடமைகளைப் பற்றி ஒரு தாயாக, மனைவியாக, தந்தையாக, சகோதரர்களாக அல்லது மக்களாக கலந்துரையாடும் போது அவர்கள் குடும்பங்களிலும், சமூகத்திலும் அவர்களின் முக்கியத்துவத்தை உணருகின்றனர். காணாமல் போனோரின் குடும்பத்தினர் எதிர்கொள்ளும் உணர்வுபூர்வமான, உள ரீதியான, உடல் ரீதியான இன்னல்களைப் பகிர்ந்துகொள்வதால் அந்நினைவுகளைச் சாதகமான நினைவுகளாக்கலாம். பங்கேற்பவர்கள் அவர்களது ஆதரவுக் குழுக்கள் மூலம் எடுத்துக் காட்டுக்களை முன்வைக்கும் போது, அவர்கள் தனித்தவர்கள் இல்லை என்பதை உணர வைக்கிறது. மேலும், அவர்கள் காணாமல் போனோரை நினைவுபடுத்தும் முகமாக ஒரு கவிதை, ஒரு பாடல் அல்லது அவர்களின் விரும்பிய உணவுகளைச் சமர்ப்பிக்கலாம்.

**"குழு அமர்வுகளின் போது நாம் எமது துக்கங்களையும், வேதனைகளையும் பகிர்கின்றோம். ஆனால், அமர்வின் இறுதியில் மன ஆறுதலுடன் வீடு திரும்புவோம்."**